**மாகாணக்கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**க.பொ.த (உயர்தரம்) – 2017**

# கிறிஸ்தவ நாகரிகம் - I

**தரம்: 13 (2017)** **நேரம்: 2.00 மணித்தியாலயம்**

## பகுதி I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.**

1) பலஸ்தீனாவில் வடக்கே சமாரியாவிற்கும் தெற்கே இதுமேயாவிற்கும் இடையில் அமைந்துள்ள பகுதி

(1) நேகேப் (2) சமாரியா (3) யூதேயா (4) கலிலேயா (5) எஸ்திரலோன்

2) அமலேக்கியருடனான போரில் யாவேயின் ஆணையை மீறி யாவேயின் கோபத்திற்கு ஆளான அரசன்

(1) தாவீது (2) சவுல் (3) சாலமோன் (4) ரெகபேயாம் (5) ஆகாப்

3) யூதேயா நாட்டிற்குள் மட்டுமே இச்சங்கத்தின் அதிகாரம் செல்வாக்குப் பெற்றிருந்தது. அச்சங்கம்

(1) எருசலேம் சங்கம் (3) எபேசு சங்கம் (5) தலைமைச் சங்கம்

(2) நிசேயா சங்கம் (4) கால்சடோன் சங்கம்

4) கிரேக்கரின் ஆட்சிக் காலத்தின் போது யூதர்களுக்கென்று எழுதப்பட்ட சட்ட ஒழுங்கு நூலாகக் கருதப்படுவது

(1) மிஸ்னா (2) தோரா (3) தால்மூட் (4) இணைச்சட்டம் (5) உரோமானிய சட்டம்

5) பேறு பெற்றோர் என்பதற்கு கிரேக்கச் சொல்லின் பொருளாகக் கொள்ளப்படுவது

(1) காரிஸ் (2) லோகோஸ் (3) நியூமா (4) ரூஆக் (5) மக்காறியோஸ்

6) அருட்தந்தை ஜீவர்கிஸ் என்கின்ற வைதீக குருவானவரால் உருவாக்கப்பட்ட இச்சபையினர் பெத்தனி என்கிற ஆச்சிரமங்களில் வாழ்ந்தனர். அச்சபையானது.

(1) நல்லாயன் சபை (4) தியான சம்பிரதாய சபை

(2) கிறிஸ்துவை பின்பற்றுவோர் சபை (5) கப்புச்சின் சபை

(3) இயேசு சபை

பின்வரும் காலப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு 7, 8, 9, 10, 11 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| A | - | கி.பி 1850 |
| B | - | கி.பி 1563 |
| C | - | கி.பி 496 |
| D | - | கி.பி 1653 |
| E | - | கி.பி 1963 |

7) அலமான் இனத்தினர் பிராங்கர்களின் அரசன் குளோவிசுடன் போரில் ஈடுபட்ட காலப்பகுதியைக் குறிப்பது

(1) A (2) B (3) C (4) D (5) E

8) இந்தியாவில் மட்டன்சேரி என்கிற இடத்தில் கூனன் சிலுவை எதிர்ப்பு சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியைக் குறிப்பது

(1) A (2) B (3) C (4) D (5) E

9) இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை நிறுவப்பட்டது

(1) A (2) B (3) C (4) D (5) E

10) இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்ற காலப்பகுதியைக் குறிப்பது

(1) A (2) B (3) C (4) D (5) E

11) திரிதெந்தின் பொதுச்சங்கம் கூட்டப்பட்ட காலப்பகுதி

(1) A (2) B (3) C (4) D (5) E

12) புதிய துறவற சபைகளை ஆரம்பிப்பதையோ, புதிய துறவற வாழ்க்கைச் சட்டங்களை எழுதுவதையோ தடை செய்த சங்கம்

(1) 1 ஆம் வத்திக்கான் சங்கம்

(2) எபேசு சங்கம்

(3) 4 ஆம் லாத்தரன் சங்கம்

(4) திரிதெந்தின் பொதுச்சங்கம்

(5) 2 ஆம் வத்திக்கான் சங்கம்

13) கி.பி 1780 இல் சிறுவரை கிறிஸ்துவின் வழியில் வளர்க்க ஓய்வு நாள் பாடசாலையை நிறுவியவர்

(1) றொபட் நேக்ஸ்

(2) யோவான் ஹவாட்

(3) வில்லியம் கேரி

(4) கிறெண்டர்

(5) வில்லியம் வாட்

14) கூற்று: ஸ்பெயினுக்கு அடிமைப்பட்டிருந்த நாடுகள் மறை போதக நாடுகளாயின.

காரணம்: பிற சமயத்தவரும் கிறிஸ்தவ மறையை தழுவிக் கொண்டனர்

(1) கூற்றும் சரி காரணமும் சரி

(2) கூற்று பிழை காரணம் சரி

(3) கூற்றும் காரணமும் பிழை

(4) கூற்று சரி காரணம் பிழை

(5) கூற்றும் காரணமும் பற்றி எதுவும் கூற முடியாது

15) கத்தோலிக்கத் திருச்சபையின் திரிதெந்தின் பொதுச்சங்கத்தினரின் மறை தூதுப் பணியில் புதிய முறைகளாகக் கொள்ளப்பட முடியாதது.

(1) மறைதூதுப் பணியினர் கொலம்பசுடன் அநேக நாடுகளுக்கு சென்றனர்.

(2) கனடாவில் மறைதூதுச் சங்கம் உருவாகியமை

(3) குரோய் தீவில் நிக்லஸ் ஆப்ரி முதல் திருப்பலியை ஒப்புக் கொடுத்தமை

(4) இங்கிலாந்து திருச்சபையிலிருந்து பிரிந்தமை

(5) வட அமெரிக்காவில் அநேகமான குருக்கள் வேத சாட்சிகளாக மரித்தமை

பின்வரும் தகவல்களை கருத்தில் கொண்டு 16, 17, 18 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - புனிதை ஆஞ்சலா
B - திருத்தந்தை 5 ஆம் சிக்ஸ்துஸ்
C - திருத்தந்தை மூன்றாவது பவுல்
D - புனித சார்லஸ் பொரமோயோ
E - புனித பிரான்சிஸ் சலேசியர்

16) நோயாளருக்காக தனது இல்லத்தையே வைத்தியசாலையாக பயன்படுத்தியவர்

(1) A (2) B (3) C (4) D (5) E

17) கி.மு 1536 இல் கப்புச்சின் சபையை அதிகாரபூர்வமாக அங்கிகரித்தவர்

(1) A (2) B (3) C (4) D (5) E

18) எழுத்தாளரின் பாதுகாவலராகக் கருதப்பட்டவர்

(1) A (2) B (3) C (4) D (5) E

19) மத்தியகால சிறந்த இறையியலாளராகக் கருதப்பட்டவர;

(1) புனித அகுஸ்தினார் (4) பெரிய அல்பேர்ட்

(2) கான்ஸ் கொஸ்கார் (5) யுஸ்தீன்

(3) புனித தோமஸ் அக்குவைன்ஸ்

20) கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் முதலாவது பேராயர்

(1) பேராயர் மெலிசன் (4) கிறிஸ்தோப்பர் பொஞ்சின்

(2) கர்தினால் தோமஸ் குறே (5) பேராயர் தியோகுப்பிள்ளை

(3) பெற்றகினி அடிகள்

21) புனித பசிலின் இளைய சகோதரர் “திருச்சபைக்கு ஊன்று கோல்” என்று பெயரால் அழைக்கப்பட்டவர்.

(1) புனித நிஸ்ஸா கிரகோரியார் (4) புனித அம்புறோசியார்

(2) ஒரிஜென் (5) புனித கிரிகோரி நாசியான்சன்

(3) புனித இரேனியுஸ்

22) பிரித்தானியாவை மிக இலகவாக கைப்பற்றி தமது ஆட்சிக்குள் கொண்டு வந்த கோத்திரங்கள்

(1) பிராங்ஸ், கோதிஸ், வண்டல்ஸ் (4) அங்கிங்ஸ், பிராங்ஸ், கோதிஸ்

(2) பிராங்ஸ், ஒஸ்கோத், விசிகோதிஸ் (5) அங்கிங்ஸ், ஜீட்ஸ், சாக்சன்ஸ்

(3) கோதிஸ், ஒஸ்கோத், விசிகோதிஸ்

23) புனித ஆசீர்வாதப்பர் துறவிகள் ஐரோப்பிய நாகரிகத்திற்கு ஆற்றிய பாரிய பணியை குறிக்கும் மூன்று சின்னங்களாவன

(1) சிலுவை, மடம், பீடம் (4) கோல், ஏர், சிலுவை

(2) சிலுவை, நூல், ஏர் (5) பீடம், கோல், சிலுவை

(3) நூல். கிண்ணம், கோல்

24) திருச்சபை வரலாற்றில் உயர் இடைக்காலம் எனக் கருதப்பட்ட காலப்பகுதி

(1) கி.பி 1000 – கி.பி 1300 (4) கி.பி 1050 – கி.பி 1300

(2) கி.பி 1500 – கி.பி 1600 (5) கி.பி 1600 – கி.பி 1800

(3) கி.பி 1500 – கி.பி 1600

25) ஐரோப்பாவில் மிகப் பழமை வாய்ந்த கல்வி நிலையங்களாகக் கருதப்பட்டவை

(1) சலேர்னா, பொலஞ்ஞா (4) கேம்ரிச், பரிஸ்

(2) கேம்ரிஜ், ஒக்ஸ்பேர்ட் (5) ரொலிடோ, கோர்டோவா

(3) பரிஸ், ஒக்ஸ்பேர்ட்

பின்வரும் விடயங்களை அவதானித்து 26, 27, 28, 29 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - அலெக்சாண்டர் கிரகம் பெல்

B - அலெக்சாண்டர் பிளமின்
C - சேர் ஐசாக் நியூட்டன்
D - அல்பர்ட் அயின்ஸ்டயின்
E - அருட்பணி ரெயார்டே சார்டேன்

26) சலனம் பற்றிய மூன்று நியமங்களை முன்வைத்தவர்

(1) A (2) B (3) C (4) D (5) E

27) 1922 இல் பௌதிக விஞ்ஞானம் பற்றிய நோபல் பரிசைப் பெற்றுக் கொண்டவர்

(1) A (2) B (3) C (4) D (5) E

28) தொலைபேசியினால் முதல் செய்தியை வழங்கி அதனை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்தவர்

(1) A (2) B (3) C (4) D (5) E

29) ஆசிய ஆயர் மன்ற ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது

(1) 1975 இல் பாங்கொக் நகரில் (4) 1974 ஹொங்ஹொங் நகரில்

(2) 1971 இல் மும்பாய் நகரில் (5) 1964 இல் லண்டனில்

(3) 1970 இல் மானிலா நகரில்

30) 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் கருப்பொருள்களை உள்ளடக்கும் பகுதி எது?

(1) ஆயர், மறை மாவட்டம், பங்கு மக்கள், குருக்கள்

(2) கடவுள், மனிதன், திருச்சபை, உலகம்

(3) உலகம், திருத்தந்தை, திருச்சபை, மறை மாவட்டம்

(4) பேதுரு, உலகம், திருச்சபை, வேதாகமம்

(5) வேதாகமம், திருத்தந்தை, கடவுள், உலகம்

31) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 16 ஏடுகளில் விதித்தொகுப்புக்குள் உள்ளடங்காததது.

(1) சமூகத் தொடர்புகள் (4) கிறிஸ்தவ கல்வி பற்றியது

(2) திருச்சபையின் நற்செய்தி பற்றியது (5) கத்தோலிக்க கீழைச்சபைகள் பற்றியது

(3) திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும் பற்றியது

32) போர்த்துக்கேயர் கால இலக்கியங்களுள் அடங்காதது

(1) யாகப்பர் அம்மானை (3) மூவிராசாக்களின் வாசிப்பு (5) அற்புத வரலாறு

(2) ஞானப் பள்ளு (4) குஸ்தன்னீனு ஹட்டன்

33) இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்படுவதற்கு முன்பே நம் நாட்டுக் கலை கலாச்சாரத்திற்கு ஏற்ப வழிபாடுகள் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியவர்

(1) மேதகு சிறில் அபே நாயக்க (4) அருட்பணி பீட்டர் பிள்ளை

(2) மேதகு எட்மன் பீரிஸ் ஆண்டகை (5) அருட்பணி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகள்

(3) அருட்பணி S.G. பெரேரா

34) இலங்கையில் மனித உரிமை, சமூகப் பணிக்கு பங்களித்தவர் இலங்கையைச் சாராதவர்

(1) மேதகு ஆயர் லியோ நாணயக்காரர் (4) மேதகு பிராங் மாக்கஸ் பர்ணாந்து

(2) அருட்பணி மைக்கல் ரொட்ரிக்கோ (5) மேதகு ஆயர் இலஷ்மன் விக்கிரமசிங்க

The National e-learning Portal for The General Education

(3) இவ்ளின் காணி அம்மையார்

35) மக்கபே என்னும் சொல்லின் பொருள்

(1) மீட்பை எடுத்துரைப்பது
(2) இவர் வழியாக இஸ்ராயேர் மீட்பு பெறுவர்
(3) அபிஷேகம் செய்யப்பட்டவர்
(4) நித்திய மீட்பர்
(5) ஆண்டவரே கடவுள்

36) ஆங்கிலேயர் காலத்தில் வெளிவந்த இலக்கியங்களுள் அடங்காதவை

(1) ஞானர்த்த பிரதீபய
(2) பக்தி பிரபோதன சஞ்சிகை
(3) உதயதாரகை
(4) மன்னா பத்திரிகை
(5) சத்திய வேத பாதுகாவலன்

37) பாஸ்கா காட்சியில் உயிரிழந்த உருவங்களுக்குப் பதிலாக உயிருள்ள மனித பாத்திரங்களைப் பாவித்து அதற்கு உயிரூட்டம் கொடுத்தவர்

(1) அருட்தந்தை மர்சிலின் ஜெயக்கொடி
(2) மேதகு எட்மன் பீரிஸ் ஆண்டகை
(3) அதிவண. யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார்
(4) போல் நவரத்தின
(5) என். எஸ். கொடமான்ன

38) “எவ்வகையிலேனும் நாங்கள் (கத்தோலிக்கர்) இப்பிரவினருக்கு சுருக்குக் காரணமாக இருந்திருந்தால் தாழ்மையுடன் கடவுளிடம் மன்னிப்பு கேட்பதுடன் எங்களால் புண்பட்டவர்களாகத் தங்களை கருதும் சகோதரர்களின் பொருத்தலையும் வேண்டுகின்றோம்’’ என்று கேட்டுக் கொண்ட திருத்தந்தை

(1) திருத்தந்தை 23 ஆம் யோவான்
(2) திருத்தந்தை 6 ஆம் பவுல்
(3) திருத்தந்தை 2 ஆம் ஜோன்போல்
(4) 15 ஆம் பெனடிக்
(5) திருத்தந்தை மகா கிரகோரியார்

The National e-learning Portal for The General Education

39) மத்திய கால யுகத்தில் “கிறிஸ்து வழி வாழ்வு” என்னும் நூலை எழுதியவர்

(1) டான்டே அலிகியேரி
(2) தோமஸ் அக்குவைனஸ்
(3) அவிலா திரேசா
(4) புனித சிலுவை யோவான்
(5) தோமஸ் ஆ கெம்பே

40) போர்த்துக்கேயர் கால கல்வி முறையில் பெரும் குறைபாடகக் காணப்பட்டது.

(1) ஆரம்பக்கலவிப் பிரிவினருக்கான பாடசாலை இல்லாமை
(2) அரசர்களுக்கான பாடசாலை இல்லாமை
(3) அநாதை இல்லப் பிள்ளைகளக்குப் பாடசாலை இல்லாமை
(4) இடைநிலைப் பிள்ளைகளக்கான பாடசாலை இல்லாமை
(5) உயர் கல்வி பெறும் பிரிவினருக்கான கல்லூரி இல்லாமை

41) ஆவியைக் குறிப்பதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்கச் சொல்

(1) ரூ ஆக் (2) காரிஸ் (3) நெயூமா (4) லோகோஸ் (5) மக்கறியோஸ்

42) டொமினிக்கன் சபையினரின் வாழ்வில் தளர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணம்

(1) பிற சபைகளின் வளர்ச்சி
(4) பொருளாதாரப் பலம் இல்லாமை

(2) திருத்தந்தைகளின் லௌகீகப் போக்கு (5) திருத்தந்தையர்களின் அவிஞ்ஞோன் சிறை வைப்பு

(3) மக்களின் ஆன்மீக வாழ்வில் ஏற்பட்ட தளர்ச்சி

43) கிரேக்க மெய்யியல் சிந்தனையின் தாக்கத்தினால் அதனை தமது இறையியல் கருத்துக்களில் பயன்படுத்திய திருத்தூதர்கள்

(1) பேதுரு, யாக்கோபு (3) லூக்கா, யோவான் (5) தோமா, பேதுரு

(2) பவுல், யோவான் (4) பவுல், அந்திரேயா

44) சட்டம் பற்றி பவுல் கூறிய கருத்து இல்லாதது

(1) சட்டம் கடவுளிடமிருந்து வருவது

(2) இஸ்ராயேலுக்கு இறைவன் அளித்த தனிச்சலுகை

(3) சட்டம் தான் மனிதனைப் பாவத்திற்கு இட்டுச் செல்கிறது

(4) நல்லதை செய்வதற்கான ஆற்றலை அளிக்கிறது

(5) சட்டம் தான் மனிதனை பாவத்தின் அடிமையாக்குகிறது.

45) தியானா தேவதையின் வழிபாட்டின் முக்கிய இடம் பவுல் திருமுழக்கு யோவானின் சீடர்களை சந்தித்த இடம்

(1) கொரிந்து (2) பிலிப்பு (3) எபேசு (4) கலாத்தியா (5) எதென்ஸ்

46) பின்வருவனவற்றுள் அந்நியோக்கிய இறையியல் கல்லூரிக்கு பொருந்தாத கூற்று

(1) பிளேட்டோவின் மெய்யிலைக் கருவியாகப் பயன்படுத்தல்

(2) திருவிவிலியத்தை விளக்க சொல்லுக்குச் சொல் விளக்கும் முறையை கையாளுதல்

(3) ஆரிய பேதகத்திற்கு வழிவகுத்தமை

(4) கிறிஸ்துவின் மனித தெய்வீக இயல்புகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தல்

(5) மூல எபிரேயத்தின் விவிலியத்தின் உதவியுடன் கிரேக்க விவிலியமாக மறுபதிப்பச் செய்தல்

47) ஐகோன் உருவங்களின் பண்புகள் அல்லாதது

(1) சிறிய மரப்பலகையில் மையினால் உருவ சித்திரங்கள் வரையப்பட்டமை.

(2) எப்போதும் பின்னணி பொன்னிறத்தால் ஆனது.

(3) முகம் பயம் நிறைந்ததாகக் காணப்படும்.

(4) கண்ணாடித் துண்டுகளால் செய்யப்பட்டுள்ளது.

(5) ஆன்மீகத் தன்மையுடன் கம்பீரமானது

48) பின்வரும் சபைகளை அவதானித்து

A - அப்போஸ்தலிக்க கார்மேல் சபை

B - பிரான்சிஸ் சவேரியார் சபை

C - திருக்குடும்ப சபை

D - புனித சூசையப்பர் (அருட்சகோதரர்) சபை

E - பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்கள் சபை

இவற்றுள் சுதேச மொழியில் கல்வி வழங்குவதற்காக இலங்கையிலே ஆரம்பிக்கப்பட்ட சபைகள்

(1) ABC (2) ACE (3) BCD (4) BDE (5) CDE

49) ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் எக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

(1) 1959 (2) 1965 (3) 1971 (4) 1900 (5) 1973

50) A - சிசரோ எழுதிய " ஹெரரேன்சியுஸ்" என்னும் நூலைப் படித்தார்

B - லியோன்ஸ் பொதுச்சங்கத்திற்கச் செல்லும் வழியில் இறந்தார்

C - இறையருளின் மறை வல்லுனர் என அழைக்கப்பட்டார்.

D - நாளடைவில் டொமினிக்கன் துறவற சபையினரின் வாழ்க்கை முறையால் கவரப்பட்டார்

மேற்கூறப்பட்ட கருத்துக்களில் புனித அகுஸ்தினாருடன் பொருந்தும் கூற்றுக்கள் எவை?

(1) A மட்டும் (4) C மட்டும்

(2) C யும் D யும் (5) A யும் D யும்

(3) A யும் C யும்

**(50×2 = 100புள்ளிகள்)**

**மாகாணக்கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**

**க.பொ.த (உயர்தரம்) – 2017**

**கிறிஸ்தவ நாகரிகம் - II**

**தரம்: 13 (2017)** **நேரம்: 3.00 மணித்தியாலயம்**

**பகுதி "I" இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி "II" இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

1.

1) பாலஸ்தீனாவில் வாழ்ந்த ஏனைய சமூகத்திலிருந்து ஆதிக் கிறிஸ்தவ சமயத்தை வேறுபடுத்திக் காட்டும் பண்புகள் நான்கு குறிப்பிடுக.

2) 3ம், 4ம் கலாபனைகள் இடம்பெற்றமைக்கான காரணங்களைக் கூறி இக்கலாபனைகளில் வேத சாட்சியாக மரித்த இருவரைக் குறிப்பிடுக?

3) திருச்சபையின் போதனைக்கெதிராக தோன்றிய பேதங்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றின் போதனைகளை எழுதுக?

4) உரோமைப் பேரரசின் நிர்வாகத்தில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் நான்கைக் குறிப்பிடுக?

5) மத்திய தரைக் கடலைச் சூழவுள்ள பகுதிகளில் திருச்சபை பரவியமைக்கு ஏதுவான காரணங்கள் நான்கைக் குறிப்பிடுக?

**(20 புள்ளிகள்)**

2.

1) ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பரவுவதற்கு முன்னின்று உழைத்த நால்வரைக் குறிப்பிடுக?

2) புனித பசில் அறிமுகப்படுத்திய சட்டக் கோவையில் உள்ளடங்கும் விடயங்கள் நான்கைக் குறிப்பிடுக?

3) இரவலர் சபையிடம் காணப்பட்ட ஏழ்மைப் பண்புகள் நான்கைத் தருக?

4) பின்மத்திய காலத்தில் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கு தருக?

5) இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட கல்வி வழங்கிய நான்கு விதமான பாடசாலைகள் எவையெனக் குறிப்பிடுக?

**(20 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

3.

1) மத்திய யுகத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் எவையெனக் குறிப்பிடுக?

2) புரட்டஸ்தாந்து புரட்சிக்கு வித்திட்ட நால்வரைக் குறிப்பிட்டு அவர்களின் போதனைகள் ஒன்றைக் குறிப்பிடுக?

3) புரட்டஸ்தாந்து புரட்சிக்குப் பின் திருச்சபையில் ஏற்பட்ட ஆன்மிக புதுப்பித்தல்கள் எவையெனக் குறிப்பிடுக?

4) இந்திய திருச்சபையில் காணப்படும் கீழைத்தேய திருச்சபைகள் நான்கினைக் குறிப்பிடுக?

5) திருச்சபை வரலாற்றில் ஆரம்பகால திருச்சபைத் தந்தையர்கள் நால்வரைக் குறிப்பிட்டு அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் ஒன்று வீதம் குறிப்பிடுக?

**(20 புள்ளிகள்)**

## பகுதி II

4.

1) மக்கபேயர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட யூதப் புரட்சி பற்றி விளக்குக?

2) இஸ்ராயேல் வரலாற்றில் இஸ்ராயேல் அரசு இரண்டாக பிளவுபட்ட முறையினை விளக்குக?
3) இஸ்ராயேல் மக்கள் வாழ்வில் பொதுச்சங்கத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக?
4) இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்திய மொழிகளைக் குறிப்பிட்டு விளக்குக?

**(20 புள்ளிகள்)**

**5.**

1) மத்திய காலத்தில் கிறிஸ்தவ சிற்பக்கலையின் பங்களிப்பினை விளக்குக?
2) ஒல்லாந்தர் காலத்தில் யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் கிறிஸ்தவ இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களைக் குறிப்பிடுக?
3) இலங்கைத் திருச்சபை வரலாற்றில் நாட்டார் நாடகக் கலையின் சிறப்புப் பற்றி விளக்குக?
4) உரோமைய ஆலய முறையின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக?

**(20 புள்ளிகள்)**

**6.**

1) இன்றைய உலகில் திருச்சபை என்னும் ஏட்டில் சமூக முன்னேற்றம் பற்றி குறிப்பிட்டுள்ள அம்சங்களைக் குறிப்பிடுக?
2) சமுதாய முன்னேற்றம், ஒற்றுமை என்பவற்றிற்கு பல்சமய உரையாடலின் முக்கியத்துவம் அவசியம் ஏன் என்பதைக் குறிப்பிடுக?
3) கிறிஸ்தவ சபைகளிடையே ஒன்றிப்புக்காக மெற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விளக்குக?
4) ஆசிய கிறிஸ்தவ சமுதாய முன்னேற்றத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் ஏன் என்பதை விளக்குக?

**(20 புள்ளிகள்)**

**7.**

1) இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூட்டப்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?
2) உலக கிறிஸ்தவ சம்மேளனம் வன்முறையற்ற அமைதி தொடர்பாக கூறும் படிப்பினைகளைத் தருக?
3) இலங்கையில் திருச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட நலன்புரிச் செயல்கள் பற்றி விளக்குக?
4) இலங்கைத் திருச்சபையானது பல்வேறு இனமத வேறுபாடுகள் இல்லாமல் உரிமைகளுக்கும் நீதிக்கும் குரல் கொடுத்துள்ளது என்பதற்கான சான்றுகளைக் குறிப்பிடுக?

**(20 புள்ளிகள்)**

8.

1) மனிதனின் பரிணாமத்தைப் பற்றி அருட்பணி ரெயார்ட்டே சார்டேனின் தத்துவம் பற்றி விளக்குக?

2) சகோதரத்துவமும் ஒற்றுமையும் பற்றிய பவுலின் படிப்பினைகளைத் தருக?

3) பவுல் நிறுவிய சபைகளைக் குறிப்பிட்டு அதில் ஒன்றைப் பற்றி விளக்குக?

4) கிறிஸ்தவர்களும், யூதர்களும் கொண்டாடும் விழாக்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக?

**(20 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education